அளவுக்கு உரிமையை நிலைநாட்டத் தக்க அளவுக்கு இருக்குமா என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து பார்த்து முடிவை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(முற்பகல் 10-40)

திரு. ஆ. நல்லசிவன் : நகராட்சி மன்றங்களின் தேர்தல்களை நடத்தும் அதிகாரம் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடமையை நம்முடைய அரசு சரிவரச் செய்ய முடியாத தால், அதையும் மத்திய அரசுக்குக் கொடுக்கும் நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதை அரசு தவிர்க்குமா? 'நீங்கள் நடத்தாவிட்டால், உங்களால் நடத்த முடியாவிட்டால், நாங்கள் நடத்துகிறோம்' என்ற அளவுக்கு இன்றைக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இவற்றைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்த முடியாததால் அல்ல, அதற்குரிய சூழ்நிலை ஏற்படாமல் தான் ஒத்திப் போடப்பட்டு வருகின்றன. இந்த நிலைமை நம்முடைய மாநிலத்திலேதான் என்றல்ல. இந்தியாவிலே உள்ள பல மாநிலங்களிலேயும் 10, 12, 15 ஆண்டுகள் என்ற அளவுக்குத் தேர்தல்கள் நடைபெறாமல் இருக்கின்றன. அந்தக் கருத்துக்களை அடிப்படையாக வைத்துத்தான் இப்படிப் பட்ட கருத்துக்களைப் பேசியிருக்கிறார்கள். வெகுவிரைவில் இந்தத் தேர்தலை நடத்தலாம் என்ற நிலை இருப்பதால், இந்தக் குறைபாடுகள் போக்கப்படுவதற்கு வழியிருக்கின்றது.

குற்றவியல் தலைமை உதவியாளர் பதவி.

*133. வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் உள்ள குற்றவியல் தலைமை உதவியாளர் பதவியை, பிற மாவட்டங்களில் உள்ளது போல் துணைத் தாசில்தார் நிலைக்கு உயர்த்துகின்ற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு காலத்திற்குள் இது அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணை வெளியிடப் படும்.

1981 மார்ச் 10]

திரு. ம. சங்காலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் குற்றவியல் தலைமை உதவியாளர் பதவி என்று வைக்கப்பட்டு, பிற மாவட்டங்களில் எல்லாம் அந்தப் பதவி துணைத் தாசில்தார் நிலையில் வைத்துக்கொண்டிருப் பதற்குக் காரணம் என்ன ? இந்த நிலை அங்கு இருப்பது அரசுக்கு எப்போது தெரிய வந்தது ? அதைப் போக்க அரசு என்னென்ன நடவடிக்கை எடுத் திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நீண்ட நாட்களாக, 5 ஆண்டு கள், 10 ஆண்டுகளாக இந்த நிலைமை இருந்து வந்திருக்கிறது. இந்த ஆட்சி வந்த பிறகுதான், இந்த நிலைமை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இதுபற்றி விரைவிலே இந்த அரசு முடிவெடுக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இந்த அரசு வந்ததற்குப் பிறகு, துணைத் தாசில்தார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ? நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், எவ்வளவு பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாவட்டங்களில் இருக்கும் வேலைப் பளுவை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு பகுதிகளில் 200-க்கும் மேற்பட்ட துணைத் தாசில்தார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ம. சங்காலிங்கம் : இந்தப் பதவி அண்மையில்தான் எல்லா மாவட் டங்களிலேயும் உயர்த்தப்பட்டது. குற்றவியல் தலைமை உதவியாளர் பதவி அண்மையில்தான், அதாவது 2 ஆண்டுகளுக்கு முன்னால்தான் உயர்த்தப் பட்டது. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும்தான் உயர்த்தப்பட வில்லை. அதற்குரிய காரணம், அது சிறிய மாவட்டம் என்பதுதான். ஆனால். இதுபோல சிறிய மாவட்டமாக இருக்கிற நீலகிரி மாவட்டத்திற்கு அந்த நிலை இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சிறிய மாவட்டம்; பெரிய மாவட்டம் என்ற பிரச்சினைக்கு இடமில்லை. மாவட்டங்களில் இருக்கும் வேலைப் பளுவைக் கவனத்தில் கொண்டுதான் கொடுக்கப்படுகிறது. கன்னியா குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விரைவிலே அந்த மாவட்டத்திற்குக் கொடுக்கப்படும்.